1968 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாகர்கோயிலிலிருந்து இராமநாதபுரம் செல்லுகின்ற கடுவிசைப் பேருந்து—வள்ளியூர், நாங்குனேரி, திசயன்விளை, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி, குறுக்குசாலை, விளாத்திகுளம், சாயல்குடி, உத்திரகோசமங்கை ஆகிய ஊர்களின் வழியாகச் செல்லும். நாகர்கோயிலிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் கடுவிசைப் பேருந்து—வள்ளியூர், திசயன்விளை, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி, குறுக்குச்சாலை, எட்டயபுரம், அருப்புக்கோட்டை, மதுரை, கோடைச் சாலை, திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி வழியாகச் செல்லும்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, இந்த விரைவு வண்டிகள் எந்த அடிப்படையில் விடப்படுகின்றன—மக்கள் கோரிக்கையின் அடிப்படையிலா அல்லது ஆர்.டி.ஓ. வேண்டுகோளை வைத்து செய்யப்படுகிறதா என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விரைவு வண்டிகள் மக்கள் விரைவாகப் பயணம் செய்ய வேண்டும் என்றுதான் விடப்படுகின்றன. மக்கள் கோரிக்கையின் அடிப்படையில்தான் விடப்படுகின்றன.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் முன்னாள் அமைச்சரும், இன்னாள் உறுப்பினருமானவர் விரைவு வண்டிகளை பொதுமக்கள் விறகு வண்டிகள் என்று படிக்கிறார்கள் என்றும், அதை மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிட்டார்களே, அந்தப் பெயரை மாற்றி எழுத அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி ஒன்றும் சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

Uniforms to State Transport Department Workers

* 196 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that Government have decided to provide khaki (mill made) uniforms to the workers in Government Transport Department instead of khadi khaki uniforms ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை. கதருக்குப் பதிலாக காக்கி மில்துணி கொடுக்கப்படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. வினாயகம் : காக்கி மில் துணி வேண்டும் என்று அங்கே வேலை செய்யும் கண்டக்டர்கள், ட்ரைவர்கள் கோரிக்கை விட்டார்களா ? எதற்காக அப்படி வேண்டும் என்று சொல்லுகிறார்கள் ? அவர்களுக்கு என்ன லாபம் ? கதரை ஏன் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசு போக்குவரத்துப் பணியாளர்கள் கதர்த்துணிகள் நீடித்து உழைப்புக் கொடுக்கவில்லை, விரைவில் கசங்கி விடுகின்றன, ஆகவே, கதர்த் துணிக்குப் பதில் காக்கி மில் துணி வேண்டும் என்று கேட்டார்கள். கதருக்குப் பதில் மில் துணி கொடுப்பது உசிதம் இல்லை என்று கருதி, அதற்குப் பதிலாக கைத்தறி துணியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி அந்த வகையில் கொடுக்கப்படுகிறது. அந்த வகையில் போக்குவரத்துத் துறைக்கும் 2,16,000 ரூபாய் மிச்சம் ஆகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த உடைகள் வருஷத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறதா அல்லது இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை கொடுக்கப்படுகிறதா? கொடுக்கும் இந்த உடை ஆறு மாதத்திற்குக் கூட வரவில்லை. ஆகவே, உழைக்கும் அவர்களுக்கு உடைகள் கொடுப்பதை உயர்த்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை அல்ல ; ஆண்டுக்கு ஒருமுறை, அநேகமாக தீபாவளியின்போது கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அவர்களுடைய தேவையை முன்னிட்டு, 1968–69-க்கான உடைகளை செப்டம்பர் திங்களிலிருந்து, அவர்களுடைய அவசரத்தை முன்னிட்டு வழங்கப் போகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த காக்கி உடைக்குப் பதிலாக ரெயில்வே கார்டுகள் போல் வெள்ளை உடை கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது அழுக்காகிவிடும்.

Extra flights within State

*** 197 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government has been consulted by the Indian Airlines Corporation for operating extra flights within this State—**

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் வருவதால் தொழிலுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதை ஒட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் கயிற்றுறில் விமான நிலையம் நிறுவ மத்திய அரசாங்கத்திற்கு, நம்முடைய அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாதாரணமாக மாநிலங்களில் உள்ள விமான நிலையங்கள் பற்றி மாநில அரசைக் கலந்து ஆலோசனை செய்வது இல்லை. ஆனாலும், அதற்கென்று குழுக்கள், அட்வைசரி கமிட்டிகள் இருக்கின்றன. அந்தக் கமிட்டிகள் மூலமாக நம் தேவைகளைச் சொல்ல முடியும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சேலம் நகரத்தில் ஒரு விமான நிலையம் நிறுவ வேண்டும் என்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வந்ததா ? அதன்மேல் அரசாங்கம் ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தக் கோரிக்கை பற்றி மத்திய சர்க்கார் சேலத்தில் தொழிற்சாலை அமைக்கப்பட்ட பிறகு அது அவசியமாக இருக்கும் என்று அதை இப்போதைக்கு ஒத்தி வைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு மாவட்டத் தலைநகரம் பற்றியும் ஒவ்வொரு உறுப்பினர் கேட்பதற்குப் பதிலாக, எல்லா நகரங்களைப் பற்றியும் ஒருவர் கேட்டால், அமைச்சர் பதில் அளிக்க வசதியாக இருக்கும்.

Dr. H. V. HANDE : Have this Government suggested or recommended to the Central Government or Indian Airlines Corporation, to have more aerodromes in our State as at present we have aerodromes only in Madras, Madurai, Coimbatore and Trichy ? In view of the fact that in recent times flights from Trivandrum to Madras have been cancelled and people want to